


திண்டுக்கல் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் த.நெடுஞ்செழியன்கோபி ஜெயந்தி இல்லத் திருமண விழாவில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் இ. பெரியசாமி, கிழக்கு மாவட்ட செயலாளர் இ .பெ.செந்தில்குமார் ஆகியோர் கலந்துகொண்டு மணமக்கள் விமலாதித்தன்– திவ்யதர்சினி ஆகியோரை வாழ்த்தினர். உடன் திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம் உள்ளார்.

### காதர்பாட்சா முத்துராமலிங்கம் தந்தை – முன்னாள் கழக சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினர்

# காதர்பாட்சா (எ) வெள்ளைச்சாமி 14ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## கழக முன்னணியினர் பங்கேற்பு!



இராமநாதபுரம், ஆக. 31 -

இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. தந்தையும் முன்னாள் கழக சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினரும், முன்னாள் கமுதி ஒன்றிய கழக பொறுப்பாளர் முன்னாள் முதுகுளத்தூர் சட்டமன்ற உறுப்பினருமான எஸ். காதர்பாட்சா (எ) வெள்ளைச்சாமி அவர்களின் 14ஆம் நினைவு நாளை முன்னிட்டு இன்று (31.8.2026) அவரது நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தப்படுகிறது.

இதில் இராமநாதபுரம் மாவட்டக் கழக, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னணியினர் கழகத்தினர்கள் பங்கேற்கின்றனர்.

### ஈரோடு தெற்கு மாவட்டக் கழக மருத்துவ அணி துணை அமைப்பாளர்

# கே.ஜியாவுதீன் குத்தூஸ் இல்லத் திருமண விழா!

ஈரோடு, ஆக. 31 -

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடனும், எதிர்கட்சி தலைவர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடனும் ஈரோடு தெற்கு மாவட்ட கழக மருத்துவ அணி துணை அமைப்பாளர் கே.ஜியாவுதீன் குத்தூஸ் - ஜெ. சையது ராபியா ஆகியோர் மகள் டாக்டர் நூருல் மர்லியா, ஏ.அபுபக்கர் ஏ.நர்கிஸ்பானு ஆகியோர் மகன் ஏ.அப்துல் ரியாஸ் பி. இ., ஆகியோரின் திருமணம் 6.9.2026 ஞாயிற்றுகிழமை பகல் 10.30 மணிக்கு மேல் ஈரோடு, பவானி மெயின் ரோடு, பிளாட்டினம் மஹாலில் திருமணம் மற்றும் வரவேற்பு விருந்தும் நடைபெற உள்ளது.

திருமண விழாவில் மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், ஊராட்சி, வார்டு கிளை கழக நிர்வாகிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள், ஆன்றோர், சான்றோர்கள், கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்த உள்ளனர்.


14 ஆம் ஆண்டு
நினைவு அஞ்சலி
நாள் : 31.08.2026 திங்கள்கிழமை





முன்னாள் கழக சொத்து பாதுகாப்புக் குழு உறுப்பினர்
முன்னாள் கமுதி ஒன்றிய கழக பொறுப்பாளர்
உயர்திரு S.காதர்பாட்சா (எ) வெள்ளைச்சாமி Ex.MLA அவர்கள்
நினைவை போற்றுவோம்

மாண்புமிகு. கே.ஆர்.பெரியகருப்பன் B.Com.,BL.,
முன்னாள் தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர்
மாவட்ட கழக செயலாளர், சிவகங்கை மாவட்டம்.

உயர்திரு. மு.தென்னவன் MA.,
முன்னாள் அமைச்சர்,மாநில இலக்கிய அணி புரவலர்

சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு வம்சம்
எஸ்.எஸ்.ஏ.வல்லபாய் B.V.A,PGAID.,
சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர், சிவகங்கை மாவட்டம்.


# மலேசிய தளபதி பேரவை சார்பில் கருத்தரங்கம்!

கோலாலம்பூர், ஆக. 31 –

மலேசிய தளபதி பேரவை சார்பில் கருத்தரங்கம். காணொளி வாயிலாக நடைபெற்றது. சோபா மாடல் ஆட்சியின் அவலங்களும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனைகளும். என்கின்ற தலைப்பில். மலேசியா தளபதி பேரவை. செயலாளர். ஹச்எம்.ஜெய்னுதீன். தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில். கவிச்சுடர் கவிதை பித்தன், பர்கூர் மதியழகன். அரவிந் ரமேஷ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

நிகழ்ச்சியில் மணிவண்ணன், வேல்முருகன், பரமேஸ்வரி, ஜெய் பூநிஷா, சமி. கார்த்தி, திருவாரூர் வேலாயுதம், நீடூர், அயூப் அன்சாரி, சுந்தர், சுரேஷ், சவுதி ஆசிப் அலி சேட், புளூணை உசேன், ரஹ்மத்துல்லா, சௌந்தர பாண்டியன், நிஷா, தர்மா, முகமது இஸ்மாயில், அபுதாஹீர், நாகேந்திரன், வள்ளி, சபியா பேகம், மூர்த்தி, சுந்தரம், அபுதாபி, மன்சூர், ரஞ்சித், குமார், துபாய், சேகர், உசேன் முகமது, ரவிக்குமார், ஹக்கீம் அலி. ஹனிஃபா, நூருதீன், முல்லை டிவி. ஹபீப் ரஹ்மான், வரகனேரி அசாருதீன், ராஜ் முகம்மது, சதாம் உசேன், பாரூக், தில்லை நகர் தினேஷ், கா.புருசோத்தமன், நாகேந்திரன், நிஜாம், ராஜகிரி, சாகுல் ஹமீது, கிரேசி, பூர்ணிமா, கனிமொழி கலந்து கொண்டு சிறப்பித்தனர். முடிவில். ஜே. சிவானந்தம் நன்றி கூறினார்.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!



### சட்டத்துறை அமைச்சருடன் விதிமீறல்!

சனாதனத்தை ஒழிப்பேன் என்று பேசிய மதுரை மத்திய தொகுதி சட்டமன்ற உறுப்பினர் முஸ்தபா, மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் சட்டத்துறை அமைச்சருடன் ஆய்வு மேற்கொண்டபோது தொப்பி அணிந்திருந்தார்.

கோயிலுக்குள் தொப்பி அணிந்து செல்லக்கூடாது என்ற விதி இருந்தும், அந்த விதியை மீறி தொப்பியுடன் கோயிலுக்குள் சென்று சட்டத்துறை அமைச்சருடன் ஆய்வு மேற்கொண்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

### அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம்

# தேரூர் பேரூர் தி.மு.க.நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!






கன்னியாகுமரி, ஆக. 31 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம், தேரூர் பேரூர் தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 28.08.2026, வெள்ளிக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் தேரூர் பேரூர் செயலாளர் G.முத்து தலைமையில், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம். மதியழகன் முன்னிலையில் தேரூர், கவிமணி நூல் நிலையத்தில் வைத்து நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட பிரதிநிதிகள் என்.ஆறுமுகம், வே.முருகன், பேரூர் துணைச் செயலாளர் சசி, பொருளாளர் M.ஞானசேகர், ஒன்றிய பிரதிநிதிகள் பெருமாள், பாபு, அருள்கண்ணன், மு. தம்புரான், M.பழனிவேல், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் A.கவிதன், J.ஆன்றோ போஸ்கோ, கழக நிர்வாகிகள் முரளி, ஜெயசிங், சுரேஷ், சிவா, கற்பகபெருமாள், மு.புலமாடன், இசக்கிமுத்து உட்பட ஒன்றிய மற்றும் பேரூர் நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

தீர்மானம்: 1 தேரூர் பேரூராட்சிக்குட்பட்ட புதுக்கிராமம் காலனி, மகாராஜபுரம், சேதுலெட்சுமி மகாராணிபுரம், கஸ்தூரிபாய் கிராமம், சுப்பிரமணியபுரம், கண்ணன்பதி ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அவர்களது வீட்டிற்கான பட்டா அவர்களது பெயரில் அரசு வழங்கிட கேட்டு தேரூர் பேரூர் தி.மு.க சார்பில் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

தீர்மானம்: 2 தேரூர் பேரூராட்சி கண்ணன்பதி பகுதியில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடம் மிகவும் சேதமடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே அதனை உடனடியாக சரி செய்து தரும்படி மாவட்ட நிர்வாகத்திடம் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.


தீர்மானம்: 3 வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 4 கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் தேரூர் பேரூர் தி.மு.க. சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.வி.எம்.அ. பொன்மொழி

### ஆகஸ்ட் 31 (2017)



பள்ளிப்பருவமாகிய 1965–ல் தான் பயின்ற பள்ளி மாணவர்களை ஒன்று திரட்டி, இந்தித் திணிப்பை எதிர்த்து போராட்டம் நடத்தியவர்.

ஒருங்கிணைந்த செங்கற்பட்டு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர், மாவட்ட இளைஞர் அணி முதல் அமைப்பாளர், மாவட்ட மாநாட்டு தொண்டர் படைத் தலைவர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட அவைத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

பெரிய காஞ்சிபுரம் கூட்டுறவு வங்கி தலைவராகவும், கலைஞர் பட்டுக் கூட்டுறவு சங்க இயக்குநராகவும், திருவள்ளூர் பட்டுக் கூட்டுறவு சங்க தலைவராகவும் பொறுப்பேற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“இவரின் நலப்பணிகள் என்றென்றும் மக்கள் மனதில் வீற்றிருக்கும். அவர் விட்டுச் சென்ற கழக பணிகள் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு தொண்டரின் உள்ளத்திலும் குடியிருக்கும்” என தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.